## இலங்கை நீதிபதிகள் நிறுவகம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 30 கணனிகள், 25 கணனி கதிரைகள், மேலும் 34 சொத்து விடயங்கள் என்பற்றின் பெறுமதி கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் ரூபா 5,340,626 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,581,136 ஆக இருந்தது. அதற்கு இணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 7,921,762 தொகையான வீழ்ச்சிக்கு ஆண்டிற்கான பெறுவனவுகள் ரூபா 7,133,828 ஆல் குறைவடைதல் மற்றும் மொத்தச் செலவுகள் ரூபா 787,934 ஆல் அதிகரித்தல் காரணமாக இருந்தது.

## 3. கணக்களிப் பொறுப்பும் சிறந்த ஆளுகையும்

### கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2012 ஆம் ஆண்டின் யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலத்தை உள்ளடக்கும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்